**வரையறுத்த ஹிங்குராணை சீனி தொழிற்சாலையின் - 2023**

**-----------------------------------------------------------------------**

வரையறுத்த ஹிங்குராணை சீனி தொழிற்சாலையின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதும் தொழிற்சாலையின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கணக்காய்வுக்குட்படும் சகல நிறுவனமும் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

மேற்கூறிய சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வுக்குட்படு நிறுவனத்துடன் தொடர்புடைய வருடாந்த நிதிக் கூற்றுக்களும், விதிகளினால் ஏற்பாடு செய்யக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் வருடாந்த செயல்திறன் அறிக்கைகளுடன் சேர்த்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

மேற்கூறிய சட்டத்தின் 38(1) (ஈ) இன் பிரகாரம் வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டுமென்பதுடன் கணக்காய்வுக்குட்படும் நிறுவனத்துடன் தொடர்புடைய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனம் செலுத்த வேண்டும்.

**2. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உளதாம் தன்மை**

தொழிற்சாலையினால் இறுதியாக தயாரிக்கப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்ட 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **உருப்படி** | **பெறுமதி ரூபா** |
|---|---|
| **சொத்துக்கள்** | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 42,211,006 |
| நீண்டகாலமாக பெறவேண்டிய மீதிகள் | 110,794,557 |
| நடைமுறை சொத்துக்கள் | 147,279,541 |
| **மொத்த சொத்துக்கள்** | **300,285,104** |

**பொறுப்புக்கள்**

| | |
|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 83,806,919 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 1,661,688,916 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **1,745,495,835** |
| தேறிய சொத்துக்கள்/உரிமைகள் | (1,445,210,731) |
| மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை | 300,285,104 |
| மொத்த வருமானம் | 11,702,140 |
| மொத்தம் செலவினம் | 10,193,734 |
| **மிகை** | **1,508,406** |

**2.1 நிதிக் கூற்றுக்களினை முன்வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துதரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பந்தி என்பவற்றின் பிரகாரம் கணக்கீட்டு ஆண்டு முடிவடைந்த பின் 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கைகள் என்பன கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும் 2016 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான 08 ஆண்டுகளுடன் தொடர்புடைய நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கைகள் என்பன இந்த அறிக்கையிடும் திகதி வரையிலும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஹிங்குரானை சீனி தொழிற்சாலை தற்போது பெயரளவிலான நிறுவனமாக இருப்பதனால் 2016 ஜனவரி 01 முதல் 2023 திசெம்பர் 31 வரையான 08 ஆண்டுகளுடன் தொடர்புடைய நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்து இது தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | தொழிற்சாலையை கலைக்கும் நடவடிக்கை இது வரை மேற்கொள்ளப்படாமையினால் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 2.2 தொடர்ந்து செல்லல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துதரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1993 ஆம் ஆண்டில் தனியார்மயப்படுத்தப்பட்ட இந்த நிறுவனம் தோல்வியடைந்தமையினால் மீண்டும் 1997 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டு, 1998 ஆம் ஆண்டு முதல் எவ்வித உற்பத்திச் செயற்பாடுகளும் இடம்பெறாமையினால் 2021 ஆம் ஆண்டில் சகல ஊழியர்களுக்கும் இழப்பீடு செலுத்தி அவர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டதோடு, இந்த தொழிற்சாலைக்கு சொந்தமான காணியின் ஒரு பகுதியும் கட்டடங்களும் 30 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு தனியார் கம்பனி ஒன்று உருவாக்கப்பட்டது. 2015 திசெம்பர் 31 ஆம் திகதிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,445 மில்லியன் எதிர்மறை பெறுமதியுடைய தேறிய சொத்துக்களின் நிலைமை அடிப்படையில் இந்த நிறுவனத்தின் தொடர்ந்து செல்லும் தன்மை நிச்சயமற்றதாக உள்ளது. | ரூபா 1,445 மில்லியன் எதிர்மறை தேறிய சொத்துக்களை காட்டிய இந்த நிறுவனம் தற்போது பெயரளவிலான நிறுவனமாக தொழிற்படுகின்றமையினால் 2019 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய அமப/1972/117/058 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தொழிற்சாலையினை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், அவ்வப்போது அமைச்சுக்களின் மாற்றத்தின் கீழ் இவ்விடயம் கையாளப்பட்டாலும் கலைத்தல் செயற்பாடு பல்வேறு காரணங்களினால் முறையாக செய்யப்படாமையினால் மீண்டும் அமைச்சு மாற்றத்தின் போது இந்த நிறுவனம் இந்த அமைச்சின் கீழ் வந்துள்ளமையினால் இது குறித்து ஆராய்ந்து எதிர்காலத்தில் கலைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கலைத்தல் செயற்பாட்டை முடிப்பதற்கு தாமதிக்காமல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயல்திறன்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துதரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1998 ஆம் ஆண்டு முதல் எவ்வித உற்பத்தி செயன்முறையும் இடம்பெறாத இந்த தொழிற்சாலையின் 2015 ஆண்டு இறுதியில் உள்ளபடியான பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள ரூபா 42 மில்லியன் பெறுமதியுடைய காணிகள், கட்டடங்கள், வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் என்பன விளைவற்று இருப்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | இந்த விளைவற்றிருக்கும் காணிகள், கட்டடங்கள், வாகனங்கள், ஏனைய உபகரணங்கள் என்பன தொழிற்சாலை கலைக்கப்படும் நேரத்தில் அரசாங்கத்தின் விதிகள் மற்றும் பிரமாணங்களின் படி முறையாக அகற்றப்படும். | 20 ஆண்டுகளுக்கு மேலாக விளைவற்றிருக்கும் அரசாங்கத்தின் இந்த சொத்துக்களை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் பயன்படுத்த தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துதரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழிற்சாலைக்குச் சொந்தமான 277.73 ஹெக்டயர் நிலம் மற்றும் அதனோடு தொடர்புடைய தொழிற்சாலை கட்டடங்கள் 30 வருடங்களுக்கு குத்தகை அடிப்படையில் தனியார் நிறுவனமொன்றுக்கு 2007 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட போதிலும் 2009 மார்ச் 26 ஆம் திகதிய கூட்டிணைப்புத் திட்ட 09/0398/329/003 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி குத்தகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு அதற்காக சட்டமா அதிபரின் அனுமதியை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இது தொடர்பாக நிதி அமைச்சு நடவடிக்கை வேண்டும். | அமைச்சரவை தீர்மானத்தின் படி முறையானதொரு குத்தகை உடன்படிக்கையொன்றை துரிதமாக தயாரித்து சட்டமா அதிபரின் அனுமதியைப் பெற உரிய அமைச்சினால் தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அண்ணளவாக 20 ஆண்டுகளுக்கு முன் குத்தகை உடன்படிக்கை மூலம் 4493 விவசாயிகளுக்கு தலா 2.5 ஏக்கர் படி 11,232 ஏக்கர் நிலம் வழங்கப்பட்ட போதிலும் அதற்கான குத்தகைப்பணம் வசூலிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு குத்தகை உடன்படிக்கை காலமும் முடிவடைந்துள்ளது. இந்த நிலத்தினை மீளப்பெறுவதற்கோ அல்லது புதிய குத்தகை உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு குத்தகைப்பணத்தினை அறவீடு செய்வதற்கோ அல்லது தனியார் தோட்ட கம்பனிகளிடம் அந்த நிலங்களை நிர்வகிப்பதற்கு கையளிப்பதற்கோ முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நிதி அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொழிற்சாலை நிலத்திற்குரிய குத்தகை உடன்படிக்கையினை தயாரித்து குத்தகை பணத்தினை வசூலிப்பதற்கு உரிய அமைச்சின் மூலம் பொருத்தமான திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| இ) | தொழிற்சாலைக்கு சொந்தமான இருப்புக்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் தொடர்பில் 20 வருடங்களுக்கு மேலான காலப்பகுதி முதல் பௌதீக சரிபார்ப்பு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் சொத்துக்களின் உளதாம் தன்மையும், சரியான தன்மையும் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 ஆம் ஆண்டில் இந்த பணிகள் நிறைவேற்றப்படும் என்று கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அதன் உறுதிப்படுத்தல் அறிக்கைகள் இதுவரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குழுவொன்று நியமிக்கப்பட்டு இந்த சொத்துக்களின் பௌதீக சரிபார்ப்பு மேற்கொள்ளப்படும். | பௌதீக சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டு அந்த சொத்துக்களின் உளதாம் தன்மையும், சரியான தன்மையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதோடு அதன் அறிக்கைகள் கணக்காய்விற்கு உடனடியாக வழங்கப்படவும் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ஈ) | தொழிற்சாலைக்கு சொந்தமான 273 உத்தியோகபூர்வ இல்லங்களில், 91 இல்லங்களில் அங்கீகரிக்கப்படாத நபர்கள் வசித்து வருவதோடு அவர்களை அகற்றுவதற்கு சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மற்றைய இல்லங்களில் இருந்து வாடகைப்பணத்தினை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி ஆணையாளர் நாயகம் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொழிற்சாலையின் உத்தியோகபூர்வ இல்லங்களில் வசித்து வருகின்ற அங்கீகரிக்கப்படாத நபர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் முறையான வாடகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு உரிய அமைச்சின் மேற்பார்வையின் கீழ் வாடகைப்பணம் வசூலிக்கப்பட வேண்டும். |
| உ) | நாரஹேன்பிட்ட அலுவலகத்தில் போத்தல் தயாரிப்புக்குரிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், 03 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு மோட்டார் வாகனம் என்பனவும் ஹிங்குரானை தொழிற்சாலை வளாகத்தில் இருக்கும் இயந்திர உபரணங்கள் உள்ளிட்ட சொத்துக்களும் 1997 ஆம் ஆண்டில் இருந்து விளைவற்றுள்ளமையினால் பயன்படுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்களினை அகற்றுவதற்கு இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சொத்துக்களை அகற்றுதல் தொடர்பில் கலைக்கப்படும் நேரத்தில் முறையாக அரசாங்கத்தின் விதிகள் மற்றும் பிரமாணங்களின் படி மேற்கொள்ளப்படும். | 20 வருடங்களுக்கு மேலான காலப்பகுதி முதல் விளைவற்றதாக உள்ள இந்த சொத்துக்களை அகற்றுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ஊ) | தொழிற்சாலையில் உள்ள சகல சொத்துக்கள் தொடர்பில் அரச மதிப்பீட்டு அறிக்கைகளை பெறுமாறு 2018 பெப்ரவரி 27 அன்று தொழில்துறை மற்றும் வணிக விவகாரங்கள் அமைச்சின் செயலாளரினால் முன்னாள் பொது முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அந்த மதிப்பீட்டு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் இந்த தொழிற்சாலையினை கலைக்கும் போது அரச மதிப்பீட்டு அறிக்கையினை பெற நடவடிக்கை எடுக்கப்படும். | தொழிற்சாலையின் சொத்துக்கள் தொடர்பான அரச மதிப்பீட்டு அறிக்கைகளை தாமதமின்றி பெற்று, கணக்காய்விற்கு தேவையான தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும். |
| எ) | 2017 பெப்ரவரி மாதத்தில் இடம்பெற்ற பொது தொழில்முயற்சிகள் தொடர்பான குழுவின் தீர்மானங்கள் மற்றும் 2019 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய அமப/1972/117/058 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானங்கள் என்பவற்றின் பிரகாரம் தொழிற்சாலையை கலைப்பதற்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கண்டறிந்து அதனை | 2019 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய அமப/1972/117/058 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தொழிற்சாலையினை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றாலும் அடிக்கடி அமைச்சுக்கள் | தொழிற்சாலையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றை தீர்ப்பனவு செய்து, கலைக்கும் செயற்பாடு விரைவாக நிறைவு செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| தீர்ப்பதற்கு தேவையான பணிகளை விரைவாக நிறைவேற்ற கட்டளையும், அனுமதியும் வழங்கப்பட்டது. எனினும், அதற்கான அமைச்சரவைப் பத்திரம் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகத்திடம் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாற்றியமைக்கப்பட்டதனால் இது தொடர்பான செயற்பாடுகள் பல்வேறு காரணங்களினால் முறையாக மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே, மீண்டும் அமைச்சரவை குறிப்பொன்றின் ஊடாக அதனை அமுல்படுத்தி எதிர்காலத்தில் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். |